Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

3 MAY 1972 UNDERGRADUATE LIBRARY

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண், 49 போன் 389 | தேசிய தினசரி | மலர் 14 இதழ் 63

யாழ்ப்பாணம் சித்திரை 1 ஸபர் 28 வியாழக்கிழமை (13-4-72)

அனைவருக்கும் எமது
அன்பு கலந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்
உரித்தாகுக
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1 ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130 தந்தி: KATHIR

# கட்சிமத்தியகுழுவிலிருந்து துடாவை தற்காலிக நீக்கம்

## கம்யூனிஸ்ட் பொலிட்பீரோ எடுத்துள்ள முடிவு

கொழும்பு புதன் — இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் (மாஸ்கோ சார்பு) மத்தியகுழு அங்கத்துவப்பதவியிலிருந்து உதவிக் கல்வியமைச்சரான திரு பி. வை. துடாவை தற்காலிகமாக நீக்கிவைப்பதென்று கம்யூனிஸ் கட்சியின் தலைமைப் பீடமான 'பொலிட்பீரோ' நேற்றிரவு தீர்மானம் நிறைவேற்றியதாக அறிவப்படுகிறது

குற்ற நீதிவிசாரணைக் கமிஷன் மசோதா மீதான வாக்கெடுப்பின்போது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஆட்சி மன்ற உறுப்பினர்கள் வாக்களிக்காமல் இருக்க வேண்டுமெனக்கட்சி செய்த முடிவுக்கு மாறாக திரு துடாவை நடந்து கொண்டார் என்ற குற்றச் சாட்டின்பேரில் அவரது மத்திய குழு அங்கத்துவப்பதவியைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதென்று 'பொலிட்பீரோ' தீர்மானித்துள்ளதாக அறியப்படுகிறது.

குற்ற நீதிவிசாரணைக் கமிஷன் மசோதா மீதான வாக்கெடுப்பின்போது வாக்களிப்பில் கலந்துகொள்ளக் கூடாது என்று கட்சி முடிவு செய்திருந்ததும் அதைமீறியதுபற்றியும் அதைத் தொடர்ந்து வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல்விட்ட கட்சியின் தலைவர் டாக்டர் விக்கிரமசிங்கா மீதும் மற்றும் மூன்று ஆட்சி மன்ற உறுப்பினர்கள் மீதும் நடவடிக்கை எடுப்பதற்குக் காரணம் காட்டுமாறு விடுக்கப்பட்ட கடிதங்கள் பற்றியும் ஆராய்வதற்காக கட்சியின் 'பொலிட்பீரோ' நேற்றிரவு கூடியது.

திரு துடாவை மத்திய குழுவங்கத்துவப் பதவியிலிருந்து தற்காலிகமாக நிறுத்தி வைப்பதெனப்பொலிட்பீரோ' முடிவு செய்ததைத் தொடர்ந்து இதர விஷயங்கள்பற்றி அடுத்த கூட்டத்தில் ஆலோசிப்பதென தீர்மானித்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

(10-ம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதிகளுக்கு தொழிற் பயிற்சி நிலையங்கள்

கொழும்பு, புதன் — கைத்தொழில் இலாகா பயங்கரவாதிகளுக்கென வீரவிலையிலும் ரிதியகமையிலும் இருதொழிற் பயிற்சி நிலையங்களை ஆரம்பித்துள்ளது.

இந்தப்பயிற்சி நிலையங்களில் பயங்கரவாத இயக்கத்தில் சம்பந்தப்பட்டவர்களெனச் சந்தேகப்பட்டவர்களுக்கு மேசன்வேலை, தச்சுவேலை, சிகை அலங்காரம் ஆகிய தொழில்களில் பயிற்சியளிக்கப்படவுள்ளது.

தடுப்புக்காவலில் தற்போது உள்ள இளைஞர்களில் பலர் இப்பயிற்சி நிலையத்தில் அனுமதிக்கப்பட்டு பயிற்சி பெறுவார்கள் எனத் தொழில் இலாகா அறிவித்துள்ளது.

## புத்தாண்டு விழா

இமையாணன். வியா — இமையாணன் சிவனடிச் சங்கத்தில் 35-வது ஆண்டு விழாவும், புத்தாண்டுவிழாவும் இன்று நடைபெறவிருக்கிறது. இவ்விழாவை முன்னிட்டு காலையில் விளையாட்டுப் போட்டியும் இரவு கலைநிகழ்ச்சிகள் உட்பட பொதுக் கூட்டமும் நடைபெறும்.

சிவனடிச் சங்கத்தின் தலைவரான திரு. சோ. சபாரத்தினம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ் விழாவில் பலரும் உரைநிகழ்த்துவர்.

சீனிபற்றியாராய

## ஆசிய அபிவிருத்தி வங்கிக்குழு

கொழும்பு,புதன் — கல்லோயா சீனி உற்பத்தித் தொழில்பற்றி ஆராய்ந்து அதன் அபிவிருத்தி பற்றி ஆலோசனை வழங்க 8 அங்கத்தவர்கள்கொண்ட ஆசிய அபிவிருத்தி வங்கிக்குழுவொன்று நேற்று முன்தினம் இலங்கை வந்துள்ளது.

## இந்திராவின் கடிதத்துக்கு பூட்டோ பதில் அனுப்பினர்

புதுடில்லி, ஏப். 12 — இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் கடிதத்துக்கு பாகிஸ்தான் ஜனாதிபதி ஜுல்பி பூட்டோவின் பதில் இன்று வந்து சேர்ந்துள்ளது.

பிரதமர் இந்திராவுடன் உச்சிநிலை பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு பூட்டோ இணக்கம் தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது.

பேச்சு வார்த்தைக்கான இடம் காலம் ஆகியவற்றை பிரதமர் இந்திராவின் விருப்பத்துக்கே பூட்டோ விட்டிருப்பதாக அறியப்படுகிறது.

இம்மாதத்துக்குள் இப்பேச்சுவார்த்தை நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கல்வித்துறையில்

## கல்வி இலாகா 103 வருடங்கள் காணாத மாற்றம்

கொழும்பு, புதன் — கல்வி இலாகா ஆரம்பிக்கப்பட்டு இதுவரை காணாத மாற்றங்களை 1972-ம் ஆண்டிலிருந்து 1976-ம் ஆண்டு வரையுள்ள 5 வருடகாலப் பகுதிக்குள் காணவிருக்கிறது.

கல்வி இலாகா ஆரம்பிக்கப்பட்டு 103 வருடங்கள் ஆகின்றன. இதுவரை கல்வி அமைப்பில் எதுவித மாற்றமும் செய்யப்படவில்லை. தற்போதைய அரசே பெரிய மாற்றத்தை இத்துறையில் கொண்டுவந்துள்ளது.

இவ்வருடம் 6-ம் வகுப்பிலிருந்து 9-ம் வகுப்புவரையுள்ள வகுப்புகளின் பாடத்திட்டத்தை மாற்றியமைத்தமை இந்தமாற்றங்களில் பெரியமாற்றமாகும். நாட்டின் மூலவளம், பொருளாதார சமூக நிலைக்கேற்ப கல்வித்துறையில் மாற்றம் செய்து அதைச் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் 5 ஆண்டு ஆரம்ப கல்வித்திட்டம் ஒன்றும் அடுத்தாண்டு கொண்டுவரப்படவிருக்கிறது. இத்திட்டத்தின்கீழ் முதலாம் வகுப்பிலிருந்து 5-ம் வகுப்புவரையுள்ள வகுப்புகளின் பாடத்திட்டம் கவனிக்கப்படும்.

அடுத்து கல்விப் பொதுத் தராதரப் பத்திரத்துக்குப் பதில் தேசிய கல்வித் தராதரப் பத்திரப் பரீட்சை வரவிருக்கிறது. 1976-ம் ஆண்டு இப்பரீட்சை பரவலாக்கப்பட்டு தேசிய ரீதியாக நடைபெறவிருக்கிறது.

மாற்றங்களுக்கேற்ப செயல்படுவதற்கு இலகுவாக கல்வியமைச்சு அலுவல்களும் பரவலாக்கப்படவிருக்கிறது. கல்வியமைச்சின் கீழ் 20 இலாகாக்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

இதேபோன்று பல்வேறு மாற்றங்கள் கல்வித்துறையில் அடுத்த 5 ஆண்டுக்குள் ஏற்படவிருக்கின்றன.

## ரஷ்யாவுக்கு ரூ. 20 கோடி அமெரிக்கா கடன்வழங்கும்!

மாஸ்கோ ஏப் 12 — அமெரிக்கா ரஷ்யாவுக்கு 20 கோடி ரூபாய் வர்த்தக கடன் உதவி வழங்கவுள்ளது. இந்தக் கடன் உதவி பற்றிய தகவலை அமெரிக்க விவசாய அமைச்சர் மால் கோலின் வெளியிட்டார். மற்றைய நாடுகளுக்கு வழங்கப்படும் நடைமுறைகளுக்கு இணங்கவே இக் கடனுதவியை வழங்குவதாக அவர் தெரிவித்தார்.

20 கோடி ரூபாய் பெறுமதியான வர்த்தகக்கடன் உதவியாக இது அமையுமென்று கூறினார்

5 நாள் உத்தியோகபூர்வமான விஜயத்தை மேற்கொண்டு ரஷ்யாவுக்கு வந்த அமெரிக்க அமைச்சர் இன்று நாடு திரும்புகிறார்.

மரண அறிவித்தல்
குமாரசாமி உடையார்
நெடுந்தீவு திரு. வே. எஸ். குமாரசாமி (முன்னைநாள் உடையாரும் கிராமசபைத் தலைவரும்) காலமானார். நல்லடக்கம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நெடுந்தீவு சேமக்காலையில் நடைபெறும். 4133

வாசகநேயர்கள், விளம்பரதாரர்கள்
அனைவருக்கும்
'ஈழநாடு' தனது உளம் நிறைந்த
புதுவருட வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கின்றது.

சினிமா ரசிகர்கள் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்
சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின்
புத்தாண்டு வாழ்த்துக்கள்

வெலிங்டன் (யாழ்.நகர்) லிடோ

தினசரி பி. ப. 2 30, மாலை 6-30 இரவு 10-00 சனி, ஞாயிறு காலை 10-30

தினசரி காலை 10-00 பி.ப. 2-00, மாலை 6-00 இரவு 9-30



★ சிவாஜி
★ லக்ஷ்மி



★ முத்துராமன்
★ நிர்மலா

நம்பியார் - நாகேஷ்—சச்சு மற்றும் பலர் நடித்த

# தங்கைக்காக

இசை: விஸ்வநாதன் டைரக்ஷன்: யோகானந்த்

---

சினிமா ரசிகர்கள் அன்பர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்
நியூ கஸலிங்கன்
இணுவில்
தினசரி மாலை 4-45
OUR MAN IN JAMAICA

12-4-72 மட்டும்
தினசரி 6-30, 10-00
சிவாஜி — தேவிகா நடித்த
ஆண்டவன் கட்டளை

---

சினிமா ரசிகர்கள் அன்பர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்
வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-00, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர்-வாணிஸ்ரீ நடித்த
மன சாட்சி

---

சினிமா ரசிகர்கள் அன்பர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்
சாந்தி
(சுன்னாகம்)
புதன், வியா, வெள்ளி, சனி மாலை 4-15 மட்டும்
LONDON IN THE RAW
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

தினசரி 6-15, 9-30
சனி 10 ஞாயிறு 10, 2-30
சிவாஜி-ஜெயலலிதா நடித்த
கலாட்டா கல்யாணம்

---

சினிமா ரசிகர்கள் அன்பர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்
பவானி
மூளாய்
தினசரி 6-30 இரவு 9-30
12. 13 -72 2-30
எம். ஜி ஆர் -ஜெயலலிதா நடித்த
கண்ணன் என் காதலன்

---

சினிமா ரசிகர்களுக்கும் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக!
நாகலஸ் சினிமா
சுன்னாகம்
இன்று 4 காட்சிகள்
எம். ஜி ஆர்-ஜெயலலிதா நடித்த
தனிப்பிறவி
(புத்தம் புதிய கொப்பி)

---

சினிமா ரசிகர்கள் அன்பர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்
யாழ் தியேட்டர்
(சங்கானை)
தினசரி 6-30 இரவு 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி - லக்ஷ்மி நடித்த
காவல் தெய்வம்

---

சினிமா ரசிகர்கள் அன்பர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்
REGAL (Jaffna)
Daily 10-30 a. m, 5-15, 7-15 p.m.
Jeffrey Hunter
in
HELL TO ETERNITY
(war film)

தினசரி 2-00 இரவு 9-45
எஸ். எஸ். ஆர்.-மைனாவதி தங்கவேலு நடித்த
கல்யாணிக்கு கல்யாணம்

---

சினிமா ரசிகர்கள் அன்பர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்
MANOHARA
Jaffna
Daily 10-30a.m 4-45 p.m.
TASTE THE BLOOD OF DRAGULA

இரவு 6 30 10-00
வாணிஸ்ரீ-கே. ஆர் விஜயா நடித்த
கறுப்புப்பணம்

---

# சீமெந்து ஓடுகள் மலிவு விற்பனை

தேசிய சிறுகைத்தொழிற் கூட்டுத்தாபனத்தின் ஒட்டுசுட்டான் பண்டாரவன்னியன் செங்கல் ஓட்டுத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் இரண்டாம், மூன்றாம்தர ஓடுகளின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

| விபரங்கள் | பழையவிலை | புதியவிலை |
|---|---|---|
| ii-ம் தர 1000 ஓடுகள் | ரூபா 275/- | ரூபா 150/- |
| iii-ம் தர 1000 ஓடுகள் | ரூபா 175/- | ரூபா 50/- |

இருப்பு மிகவும் குறைவாக உள்ளதால் வாங்குவதற்கு முந்துங்கள். அத்துடன் இச்சலுகை நீடிய காலத்திற்கு இருக்கமாட்டாது.

மேலும் விபரங்களுக்கு தொழிற்சாலை முகாமையாளருக்கோ அல்லது கூட்டுத்தாபனத்தின் பின்வரும் விற்பனைப் பிரதிநிதிகளுக்கோ விண்ணப்பிக்கவும்.

1. V. V. இராமசாமிப்பிள்ளை அன் சன்ஸ், கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.
2. K. V. சுந்தரம்பிள் அன் கோ, மற்றிவை, புளோலி
3. S. இராசையா, இராணி ஸ்ரோஸ், சங்கானை.
4. பருத்தித்துறை, வலிகாமம் மேற்கு, மூல்லைத்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்.

முகாமையாளர்,
தேசிய சிறுகைத்தொழிற் கூட்டுத்தாபன பண்டாரவன்னியன்
செங்கல் ஓட்டுத் தொழிற்சாலை,
ஒட்டுசுட்டான். 8925

---

சினிமா ரஸிகர்களுக்கும் மற்றும் அன்பர்களுக்கும் எமது உளம் நிறைந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்

யாழ். வின்சர் திரையில்
தினசரி 4 காட்சிகள் காண்பிக்கப்படுகிறது.

★ ஜெமினி ★ சௌகார்ஜானகி
★ ஜெயந்தி ★ நாகேஷ் ★ சச்சு
நடித்த

# இரு கோடுகள்

திரைக்கதை, டைரக்ஷன்: கே. பாலசந்தர்

---

ரஸிகப்பெருமக்கள் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் ஸ்தாபனத்தார்
தமது அன்பு கனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிக்கின்றனர்.



ராஜா
(யாழ்ப்பாணம்)
போன்: 7180
தினசரி 4 காட்சிகள்

★ ஜெய்சங்கர்
★ கே. ஆர். விஜயா
★ முத்துராமன்
★ தங்கவேலு
நடித்த

# நிலவே நீ சாட்சி

(டைரக்ஷன்: P. மாதவன்)
(சிறந்த படத்திற்கான பரிசுபெற்றது)

---

சினிமா ரஸிகர்களுக்கும் மற்றும் அன்பர்களுக்கும் எமது உளம் நிறைந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜிகணேசன்—ஜெயலலிதா
சுந்தரராஜன்—சந்திரபாபு
மற்றும்பலர் நடித்த
சுஜாதாவின் ராஜா (வர்ணச் சித்திரம்)

---

சினிமா ரஸிகர்களுக்கும் மற்றும் அன்பர்களுக்கும் எமது உளம் நிறைந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்

தினசரி 3 காட்சிகள்
மகாத்மா (நெல்லியடி)
V. S. T. பிலிம்ஸ்
குத்து விளக்கு

அனைவருக்கும் எமது உளங்கனிந்த
புதுவருட வாழ்த்துக்கள்
உரித்தாகுக
தங்க, வைர,
நகை வியாபாரிகள்
பொ. அம்பலவாணர்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.
போன்: 7199.

ஈழநாடு
புத்தாண்டு சிறப்பிதழ்

அன்பர்கள் ஆதரவாளர்கள்
விற்பனையாளர்கள்
பாவிப்பாளர்கள் அனைவருக்கும்
எமது
புத்தாண்டு வாழ்த்துக்கள்
உரித்தாகுக
நாடு நலம்பெற நற்சேவை செய்ய
எமது உற்பத்திப் பொருட்களை
என்றும் உபயோகியுங்கள்
மில்க்வைற் சோப்
தொழிற்சாலை
த பெ இல 77
யாழ்ப்பாணம்

# பரிதாபியே வருக!

இன்று சித்திரை நன்னாள். நம்பிக்கையோடு நாம் எதிர்பார்த்திருந்த புத்தாண்டுத் திருநாள். துளசி, விஷ்ணுகிராந்தி, சீதேவியார், மாதளம்பூ, தாழம்பூ, செங்கழுநீர், அறுகு, பீர்க்கு, வில்வம், கோசலம், கோமயம், மாமஞ்சள், மிளகு, கோரோசனை, திற்பலி, சுக்கு, ஆதியன கொண்டு நன்னீரில் காய்ச்சிய மருத்துநீர் தேய்த்த மங்களநீராடி பரிதாபி வருடத்திற்குப் பொருத்தமெனச் சோதிடவல்லுனர் வகுத்துக்கூறிய மங்களகரமான மஞ்சள்நிற ஆடை அணிந்து பரிதாபியே வருக! வருக!! எனப் பரிதாபி ஆண்டை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.

வசந்தத்தின் ஆரம்பத்தில் மலர்ந்துள்ள பரிதாபியில் கடந்த விரோதி கிருது ஆண்டில் நடந்த பல பரிதாப சம்பவங்களை மறந்து புத்துணர்ச்சியுடன் புதிய முயற்சிகளில் நாம் ஈடுபடவேண்டும்.

**விரோதிகிருதுவின்...**

[illegible], பொருள் பற்றாக்குறை, தட்டுப்பாடு, விலையேற்றம், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்ற பல வளமான வாழ்க்கைக்கு விரோதமானவற்றைத் தந்த விரோதிகிருது தேற்றுடன் கழிந்துவிட்டது. பழையது கழிந்துவிட்டதல்லவா? பழையன கழிந்து புதியன புகுதல் வழுவல ஆதலால் புதிய பரிதாபியில் புகுந்துநின்று விரோதி தந்த விரோதச் செயல்களை யெல்லாம் மறந்து அரசியல் சமூக பொருளாதாரத் துறையில் நம் நாட்டைச் சுபீட்சப்பாதையில் இட்டுச் செல்ல வேண்டியது நம் பொறுப்பு.

**பண்டைய மரபு**

விழாக்களைச் சிறப்பாகக் கொண்டாடுவதில் தமிழருக்கு இணை தமிழரே. ஒவ்வொரு விழாவையும் ஒவ்வொரு விதமாகக் கொண்டாடுவார்கள். புத்தாண்டைப் புத்தாடையுடனும் பொங்கலுடனும் விட்டுவிடமாட்டார்கள். கிராமிய மக்கள் நாட்டுக்கூத்து, ஊஞ்சல், தெம்மாங்கு, கும்மி, கோலாட்டம், கைவிசேஷம் பரிமாறல் போன்ற நிகழ்ச்சிகளில் ஈடுபட்டுக் களிப்பர். இது பண்டைய நம் மக்களின் மரபு. அரசவைகளிலும் புலவர்களையும் இசைவல்லுனர்களையும் புரவலர்கள் வரவழைத்து அவர்களைக் கௌரவித்துப் பரிசில்கள் வழங்குவர்.

இன்று இவை போன்ற நிகழ்ச்சிகள் அருகி வருகின்றன. எனினும் நம் கிராம மக்கள் சிலர் விளையாட்டுகள், தொழிலாளர்கள் வண்டிச் சவாரி, ஊஞ்சல் போன்ற நிகழ்ச்சிகளில் ஈடுபட்டுக் கொண்டாடுகிறார்கள்.

நமது பண்டைய மரபை நாம் பேணிக் காக்கவும் மலர்ந்துள்ள புத்தாண்டில் வளமான வாழ்வை அடைந்து, வீட்டுக்கும் நாட்டுக்கும் நற்பணியாற்றவும் முறைப்படி நாம் முன்னவர் செய்தவைகளைக் கருத்தில் இருத்தி ஐம்பெரும் குரவர்களை வணங்கி நிறைகுடம், கண்ணாடி, தீபம், பூக்கள், திருமுறைப் புத்தகம், பழங்கள், மஞ்சள் குங்குமம் முதலிய மங்களப் பொருட்களை வணங்கி விருந்தோம்பி வாழ்வோமாக;

— 'மிதுனம்' —

# புத்தாண்டு விழாவும் கொடைத்திறனும்

மேட மாசத்தில் சித்திரை நட்சத்திரம் பிரதானமாகையால் மாசநக்ஷத்திரப் பெயரால் இம்மாசம் சைத்திர மாசம் என்று சொல்லப்படும். சூரியன் மேட இராசியில் பிரவேசிக்கும் இந்நன்னாளையே புத்தாண்டு தினமாக தமிழ் மக்கள் பண்டு தொட்டுக் கொண்டாடி வருகின்றனர்.

மாசமானது சௌரமாசம் சாந்திரமாசம் என இருவகைப்படும். சூரியன் மேடம் முதலிய இராசிகளில் சஞ்சாரம் செய்யுங் காலம் சௌர மாசம் என்று சொல்லப்படும். பூர்வபட்சப் பிரதமை முதல் அமாவாசை அந்தமாய் உள்ள முப்பது தினங்கள் கொண்ட காலம் சாந்திரமாதம் எனப்படும். சிவபெருமானுக்கு எப்படி சௌரமாசம் விசேடமோ அப்படியே சந்திரனுடைய சஞ்சாரத்தால் உண்டாகிய சாந்திர மாதமும் விசேடமுடைத்தாம்.

மகாசங்கார காலத்தில் மீளவும் உலகம் உய்யவேண்டும் என்ற காரணத்தால் இறை வசந்திரவிக என்ற சித்திரைத் தொடக்கநாளில் தான் பிரமனை அதிட்டித்து நின்று உலகைப்படைத்தான் என்ற நம்பிக்கை நம் மக்களிடையே நிலவுகின்றது. சைவ சாத்திர உண்மையும் அதுவே.

இவ்வுண்மையை அறிந்தே பண்டைய சைவ உலகு புதுவருட விழாவைப் பெருவிழாவாகக் கொண்டாடி வருகின்றது. சூரியனுக்குப் பொங்கல் பொங்கி நைவேத்தியம் பண்ணியும் மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் பண்ணியும் இப்புண்ணிய நாளில் இறை வழிபாட்டை மேற்கொண்டு வருகின்றது நம் சைவ உலகம்.

மேலும் அரசர்கள் இப்பெருவிழாவை இயல் இசை நாடகம் ஆகிய முத்தமிழ் வளரும் பொருட்டு அன்றைய தினம் இசை விழா கொண்டாடினார்கள். இதற்கு எடுத்துக்காட்டாக திரு சி. வை. ஜகந்நாதன் அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார். அன்னாரின் கட்டுரைச் சுருக்கத்தை இங்கு தருகிறேன்.

'அன்று புதுவருடம். கண்டரா நாட்டைத் தலைநகராகக் கொண்டு நகினி என்ற நாமம் பூண்ட அரசன் செங்கோலோச்சி வந்தான். அன்று பெரு விழாவாகக் கொண்டாடப்படும் வருடப் பிறப்பு விழாவை அப்பகுதி மக்கள் கோலை வாழ்த்திப் பெருவிழாக் கொண்டாடுகின்றார்கள். இருந்தும் அரசன் மனம் இஃதிறில் ஈடுபட

[9-ம் பக்கம் பார்க்க

## தம்பிரான் சுவாமிகள் ஆசி

இன்று ஈழத்தின் இருபெரும் சமூகங்களான இலங்கைச் சகோதரர்களுக்கும் தமிழ் மக்களுக்கும் புத்தாண்டுத் தினம். பௌத்தர்களுக்கும், இந்துக்களுக்கும் முருகன் வழிபாட்டுத்தெய்வமாகவும் அமைந்திருப்பதற்கு கதிர்காமம் சான்றுபகரும். ஆகவே புத்தாண்டு மங்களத் திருநாள், தமிழர் சிங்களவர்க்கும், இந்து பௌத்தர்களுக்கும் ஒரேதினமாய் அமைந்து இவ்விரு பெரும் சமூகத்திடையே ஒருமைப்பாட்டை உணர்த்துவதுபோல், சென்றகாலம் எமக்குக் கொடுத்த பயங்கரநினைவுகள் அகல இப்புத்தாண்டில் ஆழ்கதிபது, எல்லாம் அரன் நாமமே சூழ்க வையகமும் துயர்தீர்க என்று ஆலவாயண்ணலைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

— ஸ்ரீலஸ்ரீ தம்பிரான்சுவாமிகள்

## புத்தாண்டே வாழி!

ஆழ்துயர் அகன்று ஓட,
அகமெலாம் மகிழ்வு பொங்க
சூழ்வினை ஒழிய, நல்ல
சுகம்பல விளைய, எல்லோர்
வாழ்விலும் வளம் கொழிக்க,
வையமே இனிதுவக்க,
நீள்புகழ் கொண்ட ஆண்டே
நிறைவுடன் வருக வாழ்க!

★

வொம் கொலை களவு ஒய
வொலித்திடச் செல்வம் எங்கும்
தெய்வீக மணம் கமழ்ந்தே
தேன்மழை பொழிய, செந்நெல்
உய்திட, உழவர் மாண்பு
உயர்ந்திட, உவகை நாங்கள்
எய்திட எழில் புத்தாண்டே
ஏற்றமாய் வருக! வாழ்க!

— சரவை இ. குலசேகரன்

★ கவர்ச்சியான இழை
★ நீடிய பாவிப்பு
★ சொகுசான ஓட்டம்
★ உத்தரவாதமுள்ள வேலைப்பாடு
ஆகியவற்றிற்கு
உங்கள் தேய்ந்துபோன டயர்களை
எம்மிடம் புதுப்பியுங்கள்
நோர்தேண் இன்டஸ்ரீஸ்
டயர் நிரப்புபவர்கள்
8/1, ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7158

எல்லோர்க்கும் எமது புதுவருடவாழ்த்துக்கள்

மிகச்சிறந்த சேவை செய்து
புகழ்பெற்ற பழம் பெரும் ஸ்தாபனம்
எம்.எஸ்.எம். ஜுனைட்
( 44 வருடங்களாக நற்பெயர் பெற்றவர் )
144, கே. கே. எஸ். ரோட் — யாழ்ப்பாணம்

# இன்று பிறக்கும் பரிதாபி ப

சித்திரை மாதம் 1-ந் திகதி (13-4-1972) வியாழக்கிழமை முற்பகல் நாடி 8 விநாடி 20 (9-மணி 25நிமிடம்) அமரபக்ஷ அமாவாசை திதியில் ரேவதி நட்சத்திரத்தில் 2-ம் பாதத்தில் வைதிருதி நாம யோகத்தில் சதுஷ்பாத கரணத்தில் இடப இலக்கினத்தில் கடக நவாம்சத்தில் சுக்கிரன் காலவோரையில் நாமதருவவேளையில் நட்சத்திர பட்சியாக மயில் ஊயில் தொழில் செய்யும் வேளையில் பரிதாபி வருடம் மலர்கின்றது.

உதயமாகும் இந்தப் பரிதாபி உந்தச நிலையில் பிறந்து நாட்டில் பல சுவையான திருப்பங்களை ஏற்படுத்த ஏதுவாக அமைகின்றது. பல பயன் தரும் பலன்களை தன்னிடத்தே அடக்கியிருந்தாலும் வாயதிப திரவிய காரன் அட்டமத்தில் இருப்பது லாபக் குறைவுக்கும், பொருளாதாரச் சிக்கலுக்கும் வழி வகுக்கும். தொழிலாளர் மத்தியில் ஆரம்பத்தில் மந்த நிலை ஏற்பட்டு உழைக்கும் நிலை குறைந்து செலவினங்கள் பெருக வாய்ப்புண்டு. முற்பகுதி கடினமாக இருந்தாலும் இந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் ஒரு சமநிலை ஏற்பட்டு ஆரம்ப சிக்கல்கள் அவிழ்க்கப்பட்டு மக்கள் மகிழ்ச்சியுடன் வாழும் வழியை அரசு ஆக்கித்தரும் என்பதில் ஐயமில்லை;

உள்நாட்டில் பல சம்பவங்கள் தோற்றினாலும் அரசியலார் அதை சமயோசிதமாகச் சமாளிப்பர். பின் அவை இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும். வருட நடுப்பகுதியில் பல அரசியல் வெளியார்களும் ஞானிகளும் வருகை தருவதால் சர்வதேச அரங்கில் நம்நாடு மதிப்பும் அரசியல் பலமும் பெறும். அரசுக்கு பல சோதனைகள் தோற்றினாலும் சுக்கிரன் ஆட்சி பெற்று செவ்வாயில் கூடியிருப்பதால் அரசை எவராலும் அசைக்க முடியாத நிலை உண்டு.

பெண்களை பொறுத்த வரை இவ்வருடம் சந்தப்பரப்புள்ளதாகவே காணப்படுகின்றது. அரசாங்க அலுவல்களில் மட்டுமையர் அதிக மனநாட்டம் கொள்வர். பெண்களின் உத்தியோகப்பற்று முன்னைவிட மேலிடும். ஆண்களோடு அலுவலகத்துறையில் சரிசமமாகப் போட்டியிடுவர். குடும்பப் பெண்களைப் பொறுத்தவரையில் இவ்வருடம் ஒரு வலுவற்ற நிலை காட்டுகின்றது மனதில் இலேசம் தோன்றி புழுக்க நிலை ஏற்பட்டு அடிக்கடி ஆத்திர உணர்ச்சி மேலிடும் சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. குடும்பப் பெண்கள் பொறுமையாக இருப்பின் வாழ்க்கை வழமாக அமையும்.

மருத்துவம் சட்டம் வர்த்தகம் பயின்றுகொண்டிருக்கும் மாணவர்களுக்கு இவ்வருடம் ஊக்கமளிக்கும் வருடமாம். அதாவது உத்தியோகத் துறையில் இவர்களுக்கு நல்ல பலன் ஏற்பட வாய்ப்புகள் அதிகம் உண்டு. நம்நாட்டைப் பொறுத்தவரை மருத்துவத் துறையில் பல முன்னேற்றங்கள் காணப்படும் அதே வேளையில் ஒரு கட்டுப்பாடான ஒழுங்கு நிலை கடைப்பிடிக்கப்பட்டு மக்கள் அதிக பயன் பெறுவர். மருந்து வகைகள் இறக்குமதி செய்யப்படுவதோடு நாட்டு வைத்திய துறையும் முன்னேற்றம் அடைய அரசு அதிக அளவில் ஊக்கம் அளிக்கும்.

எழுத்தாளர்களை பொறுத்தமட்டில் இவ்வருடம் ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை தரவல்லதாக அமைகின்றது. மந்தநிலையில் இயங்கிய நம்நாட்டு எழுத்தாளர்கள் மிகச் சிறந்த பலனை அடைவர். அவர்கள் மத்தியில் ஒரு உத்வேகமும் ஊக்கமும் ஏற்பட்டு செயல்படுவர் கற்பனை ஓட்டத்தில் புதுத் தெளிவு ஏற்பட்டு பயன் நாட்டவர்களையும் மிஞ்சத் தக்க அளவில் அரிய பல படைப்புகளை நம்நாட்டிற்கு தருவர். எழுத்தாளர்களுக்கு இது ஒரு பொற்காலம் என்று கூறவேண்டும். திரைப்படத் தொழிலில் மேலும் பல முன்னேற்றங்களை அடையும் பொருட்டு அதிவிரைவில் மேலோங்கும். இசைக்குழுவினர் நல்மதிப்புப் பெறுவர். நாடக அமைப்புகள் வளர்ச்சி பெறும்.

இம்முறை வெப்பக் கொடுமை அதிகமிப்பதால் சிறுவர்கள் மத்தியிலும் சொறி சிரங்குகள் போன்ற தொற்றுநோய்கள் வேகமாகப் பரவ இடமுண்டு குறிப்பாகக் குடியேற்றத் திட்டங்களில் வாழும் மக்கள் இந்த நோய்கள் குறித்து அதிக கவனம் செலுத்தவேண்டும், வெளிநாட்டிலிருந்து எந்த தொற்றுநோய்த் துன்பம் இந்த வருடம் முற்றாகக் குறைய இடமுண்டு.

கல்வித்துறையில் இவ்வருடம் ஒரு மிகச் சிறந்த எதிர்காலத்தை நாட்டுக்கு அளிக்கவல்லதாக அமைகின்றது. அரசு அறிமுகப்படுத்தும் பல புதிய கல்வித் திட்டங்களால் இதுகாலவரை இருந்துவந்த சிக்கல்கள் மாணவர் மத்தியிலிருந்து அகற்றப்படும். பரீட்சை எழுதும் மாணவர்கள் பெரும்பாலோர் சித்திபெய்துவர். மாணவ உலகம் கடந்த காலங்களைப் போலல்லாமல் அமைதியையும் ஒழுங்கையும் இம்முறை நிதானத்துடன் கடைப்பிடிக்கும். பரிதாபி வருடம் எதிர்காலச் சிற்பிகளை உருவாக்குவதில் ஆசிரியர்களையும் ஊக்குவிக்கும் வருடமாகும். சுருங்கக் கூறின் மாணவர் மனப்பக்குவம் அடையும் வருடம் பரிதாபி வருடம்.

வீதி விபத்துக்கள் கட்டுக்கடங்கி வாகனச் சாரதிகள் புது நிதானம் பெறுவர். தொழில் துறையைப் பொறுத்தமட்டில் இவ்வருடம் ஒரு பொதுப் பலனையே தருகின்றது. அரசாங்கத் தனியார் துறையிலோ தொழில் செய்வோர் தங்கள் கடமைகளில் கண்ணும் கருத்துமாக இருப்பின் நல்ல எதிர்காலம் உண்டு. புது விஞ்ஞான உதவியுடன் காய்கறி விளைச்சல் அதிக அளவில் பயன் தரும். வருட இறுதியில் மக்கள் தாராளமாக உப-உணவுப் பொருள்களைப் பெறுவர். பருவ மழைபெய்து விவசாயத்தை விருத்திசெய்யும்.

கூட்டுறவுத்துறையில் இத்தனை காலமும் இருந்துவந்த சில விரும்பத்தகாத முறைகள் களையப்பட்டு மக்கள் அதிக பயன்பெறக்கூடிய வகையில் அரசினர் நடவடிக்கை மேற்கொள்வர். உள்ளூராட்சிப்பிரசாரணத் துறை பல நாட்டுக்குப் பெரிய அளவில் வருமானம் வர வாய்ப்புண்டு. கைத்தொழில் முன்னேற்றம் பலப்படுத்தப்பட்டுத் தொழிலாளர்கள் நன்மை பெறுவர். அரசியலைப் பொறுத்தவரை அரசு தனது குடியரசுப் பிரகடனத்தை எதிர்க தடை இருப்பினும் மக்களின் ஆமோக ஆதரவுடன் நிறைவேற்றுவர். அரசுக்குத் துரோகம் புரிய நினைப்பவர்கள் மக்கள் மன்றத்தில் முற்றாகச் செல்வாக்கு இழப்பர். பொதுவாக இன்று பிறக்கும் பரிதாபி வருடம் இன்பத்தைப்பெருக்கி துன்பத்தைச் சுருக்கும்

அடுத்துப் பரிதாபி வருடத்தின் பலாபலன்களை இராசி வாரியாகப் பார்ப்போம்.

மேடம்: எண்ணிய கருமங்களை முடிப்பதில் முன்னணியில் நிற்பீர்கள். பெரியோர் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். விவசாயிகளுக்கு அதிக முன்னேற்றம் உண்டு. வாகனச் சொந்தக்காரர் ஆதாயம் பெறுவர். குடும்ப வாழ்க்கை குதூகலமாக அமையும். தெய்வ வழிபாடு அவசியம். தாய்வழித் தனவரவு தாராளமாகக் கிடைக்கும் சிலர் வாழ்க்கையில் புதுமனை கட்டுவதற்குச் சந்தர்ப்பம் ஏற்படலாம். சிறப்பான ஆண்டாகும்.

இடபம்: தொழில்துறை

சோதி

— திருமலை

யில் இடமாற்றத்திற்கு
உண்டு கௌரவம்பாதி
படலாம், அன்னிய
முறையில் நடந்து கொ
வும். வேலைதாரிகளின்
வில் மந்தநிலை ஏற்படும்,
விடயத்தில் நிதானம் தே
டும். விருந்தாளிகளின்
வையால் ஆடம்பரச் செ
கரும் தலைதூக்கலாம்.
தரவழிமூலம் சிக்கல் தோ
றலாம். குடும்ப வாழ்
அபிப்பிராய பேதங்
தோன்றினாலும் அந்
கள் உறவில் அவதா
வேண்டும். இவ்வாண்
பிற்பகுதி நன்மைதர

## 'சாதனைகள்

## அரசை அசை

மிதுனம் இவ்வாண்டு
யோகமான பலனையே
பிடும். புத்திரவழியால்
உண்டு. புண்ணிய கா
களில் முன்நிற்பீர்கள்.
வாழ்வில் அமைதி நில
தொழில்துறையில் வி
முயற்சி வெற்றியைத்த
கல்வியில் புதிய ஆ
பிறக்கும். பிறருக்கு உ
வதில் நிதானம் அவசி
கலைஞர் வாக் கௌரவி
படுவீர்கள். அவனர்
ஆதரவு திருப்தியைத்த


அன்பர்களுக்கும் - ஆதரவாளர்களுக்கும்
எமது அன்புகலந்த
புதுவருட வாழ்த்துக்கள்!
**தெய்வம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**
(பிரபல பிடவை வியாபாரிகள்)
49, பிரதான வீதி — யாழ்ப்பாணம்.



எல்லோர்க்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!
மின்சார ஒப்பந்தக்காரர்களும்
விநியோகஸ்தர்களும்
**நியூரோன் எலெக்ரிக்கல்ஸ்**
41, 143 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7016.



எல்லோருக்கும் எமது புத்தாண்
**பாரத் ஸ்**
கஸ்தூரியார் வீதி —



அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது உளங்கனிந்த
புதுவருட வாழ்த்துக்கள்
**ஈஸ்வர் கோப்பறேசன்**
அன்
**றேடியோனிக்**
(பிரபல றேடியோ உப-உறுப்பு
இறக்குமதியாளர்களும், விற்பனையாளர்களும்)
18, ஸ்ரான்லிறோட் — யாழ்ப்பாணம்
போன்: 7308



உங்கள் இல்லங்கள்
பொலிவுடன் விளங்க
அழகும் பிரகாசமும் நீடித்து உழைக்கும்
திறனும் ஒருங்கே அமையப் பெற்ற
'யாழ் மார்க்'
அலுமினியப்பாத்திரங்களை
வாங்கிப் பாவியுங்கள்
மற்றும்
செம்பு, பித்தளைப் பாத்திரங்களையும்
உற்பத்தி செய்பவர்கள்
**யாழ். உலோகத் தொழிற்சாலை**
250-254 கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தந்தி: யாழ் மெற்றல் போன்: 7049



எல்லோர்க்கும் எமது புதுவருட

★ நீடித்து உழைப்பவை!
★ எளிதில் நொருங்க
★ எங்கும் இடைப்பெ
**சன்சைன் கண்ணாடிச் சா**
தயாரிப்பாளர்கள்:
**சன்சைன் கண்ணாடித் தொ**
சங்கானை.



எல்லோர்க்கும் எமது புதுவருடவாழ்த்துக்கள்
புத்துணர்ச்சிக்கும்
உற்சாகத்திற்கும்
**அண்ணா கோப்பி**

**அண்ணா இன்டஸ்றி**
இணுவில்

# வங்காளிகளை தாயகம் அனுப்ப பாகிஸ்தான் அரசு சம்மதம்

## செஞ்சிலுவை பிரதிநிதிகள் மூலம் டாக்காவுக்குச் செய்தி

டாக்கா, ஏப்ரல் 12

பாகிஸ்தானிலுள்ள வங்காளிகள் அனைவரையும் வங்காள தேசத்திற்கு திருப்பியனுப்புவதற்கு பாகிஸ்தான் அரசு கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளது.

வங்காளதேசம் பாகிஸ்தானிலிருந்து பிரிவதற்கு முன் வங்காளிகள் மேற்குப் பாகிஸ்தானிலும் வாழ்ந்தனர். வங்காளதேசம் தனிநாடாகப்பிரிந்த பின்னர் பாகிஸ்தானில் வாழும் வங்காளிகள் கொடுமைப் படுத்தப்படுவதாகவும் அவர்களை வங்காள தேசத்திற்கு செல்ல பாகிஸ்தான் அரசு அனுமதிக்க வேண்டுமெனவும் வங்காள அரசு பல முறைகேட்டுவந்தது. இதேபோல பாகிஸ்தானை ஆதரிக்கும் பீகாரி முஸ்லீம்கள் வங்காளதேசத்தில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களது பிரச்சினையும் பெரிதாக இருக்கிறது. இந்த பீகாரிகள் வங்காள தேசப்பிரஜைகளே என்று பாகிஸ்தான் கூறிவருகிறது.

இந்த நிலையில் பாகிஸ்தானிலுள்ள வங்காளிகளை வங்காள தேசத்திற்குச் செல்வதற்கு பாகிஸ்தான் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டிருப்பது பாகிஸ்தான் வங்காளதேசப் பிரச்சினையில் புதிய திருப்பத்தை ஏற்படுத்துமென அரசியல் வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது.

பாகிஸ்தானின் இந்த முடிவு டாக்காவிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தலைவர் மூலம் வங்காள தேச வெளியுறவு அமைச்சர் திரு அப்துல் சமத் ஆஸாத் திடம் தெரிவிக்கப்பட்டது.

பாகிஸ்தானிலுள்ள வங்காளிகளையும், வங்காள அதிகாரிகளையும் வங்காளதேசத்துக்குக் கொண்டு வருவதற்கான பிரயாணச் செலவு பற்றி தமது அரசு ஆலோசித்து வருகிறதென திரு. ஆஸாத் தெரிவித்தார்.

பாரசூட்பயிற்சி

### விபத்தில் 16பேர் பலி

மட்ரிட், ஏப் 12

ஸ்பெயினில் பாரசூட் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் விபத்துக்குள்ளாகியதில் 16 பாரசூட் படையினர் பலியானார்கள் 60 பேர் படுகாயத்துக்குள்ளானார்கள். இவர்களில் பலரின் நிலைமைகள் கவலைக்கிடமாய்இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 160 பேரைக் கொண்ட இவ்வணி ஒருதீவின் மலைப்பகுதியில் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையிலேயே இவ்விபத்து ஏற்பட்டதாம்'

### தொழிற்கட்சி பேச்சாளர்

லண்டன், ஏப்ரல் 12

பிரிட்டிஷ் எதிர்கட்சித் தலைவர் திரு. ஹரோல்ட் வில்சன் புதிய எதிர்கட்சிப் பேச்சாளராக திரு. டெனிஸ் ஹீலியை நியமித்துள்ளார்.

பிரிட்டன் ஐரோப்பிய பொதுச்சந்தையில் சேர்வதென்ற முடிவுக்கு எதிராக தொழிற்கட்சி செயல்படாவிதத்தில் அதிருப்தியுற்ற தொழிற்கட்சியின் உபதலைவர் பதவியிலிருந்து திரு. ஜெங்கின்ஸ்ஸும் மற்றும் 5 உறுப்பினர்களும் ராஜினாமா செய்ததை அடுத்தே இப்புதிய நியமனத்தை திரு வில்சன் செய்துள்ளார்.

### அரசியல் திட்டம் வரையும் குழு நியமனம்

டாக்கா. ஏப், 12

வங்காள தேசத்துக்குப் புதிய அரசியல் திட்டத்தை வரைய 34 உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவுக்கு வங்காளதேச சட்ட அமைச்சர் திரு. கமால் ஹூசைன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய அரசியல் திட்டம் வரையப்பட்டு ஜூன் மாதம் 10ம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### பன்னாலையில் புத்தாண்டுவிழா

யாழ்ப்பாணம், வியாழன்

தெல்லிப்பழை பன்னாலை கணேச சனசமூக நிலையத் திறந்தவெளியரங்கில் இன்று மாலை புத்தாண்டு விழா கொண்டாடப்படவிருக்கிறது. இளைப்பாறிய தபாலதிபர் திரு. சி. சின்னத்தம்பி தலைமையில் நிகழும் இவ்விழாவில் சமாதான நீதவான் திரு' சரவணமுத்து பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். கவிஞர்கள் செ. கதிரேசர்பிள்ளை, சபா. ஜெயராஜா, மயிலங்கூடலூர் பி. நடராஜன் ஆகி செல்வன் பூ. சோதிநாதன், வி. கந்தவனம் ஆகியோர் கலந்து கொள்ளும் கவியரங்கும் அம்பலவாணப்பெருமன்றத்தின் "நல்ல தீர்ப்பு" நாடகமும் விழாவில் இடம்பெறும். திரு க. சண்முகலிங்கம், திரு. செ. வரதராசப் பெருமாள், திரு. சு. விநாயகமூர்த்தி, திரு. க. பொன்னம்பலம் உட்படப்பலர் உரையாற்றுவர்.

### உங்கள் பலன்

சித்திரை மாதம் 1-ந்திகதி (13-4-1972)

மேஷம்: இதயப்படுவனின் இன்பக்கூத்து வாழ்க்கை சௌகரியங்கள் நிறைந்ததாகவே இருக்கும்.

ரிஷபம்: வாகனச்சாரதிகள் மாதுமக்களின் நன்மதிப்பைப் பெறுவர் தொழிலாளர்களுக்கு ஊதியத்தில் உயர்வும் கிடைக்கும்,

மிதுனம்: வேண்டிய அளவிற்கு இன்று வெளிப் பணம் திரளும் மாதுவழிப் பெருமைக்கு இடமுண்டு.

கடகம்: அறவழியில் நாட்டம் செல்லும் வேதாந்த சிந்தனைகள் தலைதூக்கும். இரக்க சிந்தனையின் மூலம் பொருட்செலவுண்டு.

சிம்மம்: வயிற்றுக் கோளாறு தோன்றக்கூடும் உணவு விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும் நன்று.

கன்னி: கலைத்துறைவழியால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு. பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர்.

துலாம்: இகழ்ந்துப் பேசியவர்கள் இன்று சிறப்பிழுவார்கள். உதவிசெய்யப்போய் உபத்திரவத்தை அனைத்துக் கொள்ளநேரிடும்.

விருச்சிகம்: எதிர்பாராத பணமுடை ஏற்படும். கடன் தொல்லையால் கஷ்டப்படுவீர்கள். தொழில்துறையில் தொல்லைகள் தோன்றிமறையும்.

தனுசு: ஓவியர்கள் வாழ்க்கை ஒளிமயமாகும். சிலருக்கு இடமாற்றமும் ஏற்படலாம் கலைஞர்களுக்கு நல்லதினம்.

மகரம்: பொருள்வரவுக்கும் இடமுண்டு உத்தியோகத்தர்களுக்கு மேலிடத்து ஆதரவு கிடைக்கும் சிறப்பான நாள்.

கும்பம்: உடல்நலன்சிறிது பாதிக்கப்படலாம் திரைமறைவில்மோசடி நடக்கும். நம்பிக்கையின் மூலம் பணம் விரயமாகும்.

மீனம்: எதிலும்ஏமாற்றம் தென்படும். அரசபயத்துக்கும் இடமுண்டு எதிலும் அடக்கத்துடனும் நிதானத்துடனும் இருக்கவும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## தென் வியட்னும் படைகள் எதிர்த் தாக்குதல்

சைகோன், ஏப்: 12

கம்யூனிஸ்ட், துருப்புக்களுக்கெதிராக தென்வியட்னாம் துருப்புக்கள் தங்கள் தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளனர். இப் புதிய தாக்குதலின்பொழுது அமெரிக்கப் படைகள் புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளதாக சைகோன் வட்டாரங்களில் பேசப்படுகிறது. கடந்த 25 மணி நேரத்தில் 490 விமான அணிகளும், பி 52 ரக விமானங்களும் தென் வியட்னாமில் ஊடுருவியுள்ள கம்யூனிஸ்ட் துருப்புக்களின் நிலைகள்மீது 19 முறை தாக்கியுள்ளன. வட வியட்னாம் மீதும் கடும் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். ஆனால் எத்தனை தடவை இப்பகுதி களைத் தாக்கினர் என்பது தெரியவில்லை.

தென்வியட்னாம் துருப்புக்கள் நல்ல பலத்துடன் இருப்பதாகவும், ஆனாலும் கம்யூனிஸ்ட் துருப்புக்களின் தாக்குதல்களை எதிர்பார்க்க வேண்டியுள்ளதாகவும் வாஷிங்டனிலுள்ள ராணுவத் தளபதி ஒருவர் தெரிவித்தார்.

வருத்தம்

வியட்னாம் போர்நிலைமை பற்றி அண்மையில் இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. சுவரன் சிங் வெளியிட்ட கருத்து தமக்கு மிகவும் வருத்தம் தருவதாக அமெரிக்க இராஜாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## அண்டை நாடுகள் வலுவுடன் விளங்கவேண்டும்

திருமதி காந்தி

புதுடில்லி, ஏப், 12

ஆசியாவிலிருந்து அந்நியத் துருப்புக்கள் யாவும் வெளியேறிவிடவேண்டும், எமது அண்டை நாடுகள் வலிவுடனும் உறுதியுடனும் இருந்தால் தான் அவை பிறநாட்டுத் தாக்குதல்களிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி கூறியுள்ளார்.

பிறநாடுகளிலுள்ள இந்தியத் தூதர்கள் மகாநாட்டில் உரையாற்றுகையிலேயே திருமதி காந்தி மேற்கண்டவாறு கூறியுள்ளார். இந்த மகாநாட்டில் வெளி நாடுகளிலுள்ள 28 இந்தியத் தூதுவர்கள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் பிரதமர் காந்தி தொடர்ந்து பேசுகையில், இந்தியா தலைமைப் பதவிக்கு தாவ விரும்பவில்லை. நமது வெளியுறவுக் கொள்கை மண்டலசார்பற்றதே. ஒரு காலத்தில் சிலர் இக்கொள்கையைக் குறை கூறியவர்கள் இப்பொழுது அப்படிச் சொல்வதில்லை என்றார்.

### நாளை புத்தக அறிமுக விழா

யாழ்ப்பாணம், வியாழன்

இல்லூர் செல்வராசன் எழுதிய "தணியாத தாகம்" என்னும் திரைப்படச்சுவடி அறிமுகவிழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. இலங்கைப் பத்திரிகையாளர் ஒன்றியத்தின் தலைவர் திரு. தி. ச. வரதராசன் தலைமையில் நிகழும் இவ்விழாவில் திருவாளர்கள் இரசிகமணி கனக செந்திநாதன், மு. தளையசிங்கம், தேவன், சொக்கன், இளங்கீரன், கே. தங்கவடிவேல், செ. யோகநாதன், வ. கந்தசாமி ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் விற்பனையை ஆரம்பித்துவைப்பார்.

## தொழிலாளர்யாவருக்கும் பிரச்னைகள் ஒன்றே

மாவிட்டபுரம், புதன்

'நாடுபூராவிலும் உள்ள தொழிலாளரின் வாழ்வு சிறப்புறும் வகையில் இன்று எமது சங்கம் தொழில் அமைச்சர் முன்செய்துள்ள ஒப்பந்தம் தொழிலாளர்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாகும். மேலும் எம் உரிமைகளை நிலைநாட்டச் சகல இனத் தொழிலாளர்களும்ஐக்கியப்பட்டுச் செயல்படவேண்டும்'' என்று லங்கா தொழில் பொதுத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளரான திரு. டபிள்யூ. எல். பெர்னாண்டோ யாழ். பிரதேச லங்கா தொழிற் சங்கத்தின் விசேஷ மாநாட்டில் பேசுகையில் கூறினார்.

திரு. ஏ. வைத்திலிங்கம் தலைமையில் நடந்த இம் மாநாட்டில் அவர் தொடர்ந்து பேசுகையில் "சிங்களவருக்கு வேறு பிரச்சினை, தமிழருக்கு வேறு பிரச்சினை அல்ல. சகல தொழிலாளர்களுக்கும் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க சகலரும் முன்வரவேண்டும்" என்றார்

ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. எஸ். நடேசன் பேசுகையில், மக்கள் மறுமலர்ச்சிக்கும் பாட்டாளி மக்கள் உயர்வுக்கும் வழிகோலிய மக்கள் அரசு ஆற்றிய சேவைகள் பாராட்டத்தக்கவையென்றும், தோட்டங்களில் சங்கத் தலைவர் செல்ல முடியாது இருந்ததை மாற்றியமைக்கப் பட்டதென்றும் சொன்னார்.

திரு. வி. பொன்னம்பலம் எஸ். நடராசா உட்படப் பலர் உரையாற்றினர்கள்.





எமது சோப் பாவனையாளர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் எமது உளம்நிறைந்த

புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்

என்றும் தூய்மையான சலவை செய்வதற்கு

சில்வர் வைற் நீலசோப். பார்சோப் வாங்கி சலவை செய்யுங்கள்

தயாரிப்பாளர்: கலா இன்டஸ்றீஸ்

கோண்டாவில் — யாழ்ப்பாணம்.

எல்லோர்க்கும்
எமது புதுவருட வாழ்த்துக்கள்!



கண்ணையும்......கருத்தையும்
கவரும்
தங்க-வைர நகைகளை
தெரிவு செய்ய
சிறந்த ஸ்தாபனம்

கே. என். எம்.
மீரான் சாஹிப்
தங்கப்பவுண் நகைமாளிகை
கன்னாதிட்டி, (போன்: 585) யாழ்ப்பாணம்.

நீடித்த உழைப்பும்
நிறைந்த பயனும் மிக்க
உலகில் புகழ்பெற்ற
றேடியோக்கள்



மிகவும் நிதான விலையில் கிடைக்கக்கூடிய
நம்பகமான ஸ்தாபனம்
மறவாதீர்கள்
எஸ். சுலைமான்கண்டு
அண் பிறதர்
5 & 7 ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்

பிள்ளைகளின் உயர்வுக்காக

# 'பெற்றோர் தியாகம் செய்யவேண்டும்'

உடுப்பிட்டி, புதன்

"பாடசாலையின் வளர்ச்சிக்குத் தேவையான சகல உதவிகளையும் அரசாங்கம் செய்யுமென எதிர்பார்க்கக் கூடாது. பாடசாலையை முன்னேற்றுவதில் பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் வகிக்கும் பங்கு முக்கியமானது. பொருளாதார நெருக்கடி மிகுந்த இவ்வேளையில் நாம் சுயமுயற்சியுடனேயே பாடசாலையை முன்னேற்ற வேண்டும். இதற்காகத் தம் பிள்ளைகளின் உயர்வுக்காகப் பெற்றோர்கள் ஓரளவு தியாகம் செய்ய முன்வரவேண்டும்".

மேற்கண்டவாறு கரணவாய் தெற்கு, மணியகாரன் தோட்டம் தமிழ்க்கலவன் பாடசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் தலைமையாசிரியர் திரு. எஸ். தாமோதரம்பிள்ளை வேண்டுகோள் விடுத்தார்.

"ஒத்துழைப்பு மட்டும் போதாது. பாடசாலையின் வளர்ச்சிக்குப் பொருளாதார உதவியுமவசியம். இவ்விடயத்தில் பெற்றோர்களின் ஆர்வம் இன்றியமையாதது. தாய்மார்தான் தமது பிள்ளைகளின் கல்வியிலும் முன்னேற்றத்திலும் அதிக கவனம் செலுத்துகின்றனர். அவர்கள் காட்டும் அக்கறையே பிள்ளைகளின் கல்வியை முன்னேற்றுமென்பதுறுதி. பெற்றோர் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு ஒழுங்காக அனுப்ப வேண்டும். படித்த சமுதாயத்தில் படிக்காதவர்கள் வாழ்வது கஷ்டம். பாடசாலைகளில்லாவிட்டால் சமுதாயம் சீரழிந்துவிடும்" என்றும் அவர் சொன்னார்.

மீண்டும் இப்பாடசாலையில் 8ம் வகுப்புவரை வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று திரு ஜெ. ஜெயக்குமாரால் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத் தலைமையாசிரியர் திரு ரீ. கந்தவனம், இளைப்பாறிய தலைமையாசிரியர் திரு கு. சுப்பிரமணியம், திரு நடராசா, திரு. க. இரத்தினம் ஆகியோரும் பேசினர். செயலாளர் ஆசிரியர் திரு த. மணிசுந்தரம் நன்றியுரை கூறினார்.

## அதிக பொருள்களை இந்தியா வாங்கும்

கொழும்பு, புதன்

இலங்கையிடமிருந்து அதிகளவில் பொருள்களை இந்தியா வாங்கும். இதன் மூலம் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் வர்த்தக உறவுகள் மேலும் பலப்படும். இதற்கு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியும், வெளியுறவு அமைச்சர் திரு. சுவரண்சிங்கும் பெரும் உதவிபுரிந்தார்கள் என்று திட்டமிடல் வேலைவாய்ப்பு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. குணசேகரா தெரிவித்தார்.

8500 தொன் கொப்பறாவையும், 900 மெட்ரிக் தொன் காரீயத்தையும் இலங்கையிடமிருந்து இந்தியா வாங்கியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## 'நாடகம், சினிமா உருவாக நாட்டுக்கூத்துதான் காரணம்'

யாழ்ப்பாணம், வியா.

"பழமைகளை தமிழ்மக்கள் படிப்படியாக மறந்து வருகிறார்கள். இந்தநிலையில் நம்மிடையேயுள்ள கலைஞர்கள் நாட்டுக்கூத்தை அழிந்துவிடாமல் பாதுகாப்பதில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்' என்று யாழ்ப்பாணம் திறந்தவெளியரங்கில் நாட்டுக்கூத்து விழாவை ஆரம்பித்துவைத்துப் பேசிய யாழ் மாநகர துணை மேயர் திரு ஆ. துரைராசசிங்கம் கூறினார்.

திரு ஜோசேப் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் துணை மேயர் தொடர்ந்து பேசுகையில் நாடகமும் சினிமாவும் உருவாவதற்கு காரணமாயிருந்தது நாட்டுக்கூத்துத்தான். நம்மவர்கள் அதை அழிந்துவிடாமல் பாதுகாத்து வருகின்றார்கள். முன்பெல்லாம் கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவம் சம்பந்தமான கதைகளையும் இந்துக்கள் சைவம் சம்பந்தமான கதைகளையும் தெரிந்தெடுத்து நாட்டுக்கூத்தாக மக்கள் முன்வைத்தனர். ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது. எம்மதமும் சம்மதமென இருபாலாரும் ஏற்று எல்லாக் கதைகளையும் நாட்டுக்கூத்தாக மக்கள் முன் வைக்கின்றனர். இது எமது எதிர்கால வாழ்வுக்கு நம்பிக்கையூட்டுவதாகவுள்ளது என்று குறிப்பிட்டார்.

எல்லோருக்கும் எமது அன்புகலந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

உங்களுக்குத் தேவையான எல்லா விதமான
'பேக்கின்ஸ்' உதிரிப்பாகங்கள்
'ஜோன்சன்ஸ்' உதிரிப்பாகங்கள்
யாவும்
நிதானமான விலைகளில் எம்மிடம் கிடைக்கும்



உங்கள் கட்டிடங்கள் உறுதியாக இருப்பதற்கு தீரமான
★ இரும்புச் சாமான்கள்
★ பெயின்ட் வகைகள்
★ அஸ்பெஸ்டஸ் சீற் வகைகள்
★ மர வகைகள்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

விஷ்ணு ஹாட்வெயர்ஸ்ரோஸ்

57, யாழ்ப்பாணம் வீதி, வல்வெட்டித்துறை
போன்: 34 தந்தி: 'சிற்றம்பலம்'

# ஓஹோ சோப்

உற்பத்தியாளர்களும்

## பிரபல தேங்காய் எண்ணெய்
## பிண்ணாக்கு உற்பத்தியாளர்களுமான

CSK

சி. எஸ். கே. கந்தையாச் செட்டியார் ஸ்தாபனத்தார்

உளங்கனிந்த

# புத்தாண்டு வாழ்த்துக்களை

தமது வாடிக்கையாளர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும்

சக உற்பத்தியாளர்களுக்கும் தெரிவிக்கின்றார்கள்

**ஓஹோ பார்சோப், நீலசோப், வெள்ளைசோப்**
**உங்கள் உடைகளிலுள்ள அழுக்குகளை அகற்றி**
**உடைகளை அதிக வெண்மையாக்குகின்றன.**
**ஓஹோ மிகவும் மலிவான விலையில் எங்கும்கிடைக்கும்.**
**ஆகவே உங்களது அடுத்த சலவை ஓஹோவினால்**
**ஓஹோ என்றிருக்கட்டும்!**

## சிறந்த தரமான தேங்காய் எண்ணெய்

வேண்டுமானாலும்

## கால்நடைகளுக்கு சிறந்த பிண்ணாக்கு

வேண்டுமானாலும்

## உத்தரவாதம் பெற்ற இடம்

# சி.எஸ்.கே. கந்தையாச்செட்டியார் ஸ்தாபனம்

## சரி விளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள் ஒட்டுவேலைகள் பல்லுச் சக்கரம் வெட்டுதல் (Gear wheel cutting) என்ஜினியர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராஜா மெஷின் கொம்பனி, 95. ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 4162

### சோதிடம்

நட்சத்திரம், வயது, பூவின் பெயர், 60க்குள் ஒரு இலக்கம் குறித்து, முத்திரையுடன் எழுதுவதன் மூலமும் நேரிலும் பதில் பெறலாம். இலவச ஆருடம், டாக்டர் ந. சண்முகராஜா ஜே. பி., கொக்குவில். 4175

### விற்பனைக்கு

தமிழ் சித்திரை 1972-1973 வரையுள்ள இராசிப்பலன்கள் ஒவ்வொரு ராசிக்கும் ஒரு புத்தகமாகப் பன்னிரண்டு ராசிக்குமுள்ளன. விலை ரூபா 1-50. வே. த. மயில்வாகனம் ஆயர்பாடி சோதிடநிலையம், மாவிட்டபுரம், தெல்லிப்பளை. 4904

நாவற்குழியில் ரயில் நிலையத்திலிருந்து 50 யாருக்குள் அரசினர் அபிவிருத்திக்கு முன்பாக ஒவ்வொன்றும் நான்கு பரப்புகள் கொண்ட 15 துண்டுக் காணிகள் விற்பனைக்குண்டு. நல்ல தண்ணீர். விபரங்கட்கு என். விஜயரத்தினம், 106, கொழும்புத்துறை வீதி. யாழ்ப்பாணம். 4928

### தேவை

பிளாஸ்டிக், அலுமினியம் பொருட்கள் தயாரிக்கும் தொழில் ஸ்தாபனத்திற்கு G.C.E.(O L) சித்தியடைந்த நல்லொழுக்கமுடைய ஒரு காசாளர் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். சம்பளம் மாதம் ரூபா 140/-பிணை ரொக்கம் ரூபா 1000. சொந்தக் கையெழுத்தில் 23-4-72க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம் 4218, C/o ஈழநாடு. 4218


(3-ம் பக்கத் தொடர்ச்சி)

விலை. கனிரசம் ஊட்டும் புலவர்களின் இசைவிருந்தை கடுணவாயிலாகக் கேட்டின்புறவிரும்பினான்.

## நன்னி மன்னன் அரண்மனையில்

இசை விருந்துக்கு அவையில் சமஸ்தான வித்துவானுகிய வன்பரணராம் பாணர் ஒருவரை ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. வடுகப்பிற்பு நேரம் மாலைக்காலம் பாணர் இசைவிருந்தாட்ட ஆரம்பித்தார். ஆனால் பாணரோ அக்கால வழக்கின்படி அவ்வக்கால நேரங்களுக்குரிய பண்ணை இசை மீட்கவில்லை. மாலைக் காலத்துக்குரிய செவ்வழிப் பண்ணைப் பாடாது காலை நேரத்துக்குரிய பண்ணைப் பாடினர். ஆனால் நல்ல இசையமுதாய் இருந்த அக்கால வழக்கிற்கு மிகவும் முரண்பாடாக அமைந்திருந்தது.

அரசனோ ஆச்சரியப்பட்டான். சமஸ்தான வித்துவானோ அரசன் முகத்தையும் அவையோர் முகத்தையும் பார்த்தான். வெட்கமும் துக்கமும் அவன் முகத்தையும் மனத்தையும் வாட்டியது. மனதில் ஒரு உபாயம் எழுந்தது பண்வாணருக்கு. இதைக் கனிருசமாக புறநானூறு 149ம் செய்யுள் கூறுகிறது.


### குதிரைகள் தேவை

யாழ் மாசேனத்திலிருந்து நல்ல இளகுதிரைகள் தேவை. விலைக்கோ அல்லது வாடகைக்கோ திறம், உயரம், பிடரி மயிர், நீளம் முதலிய விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

நாடகமேடைத்திற்கு முன்னதாக உள்ள குதிரை வண்டியும் தேவை.

சினேட்ரேட்ஸ் லிமிட்டெட்,
3. மக்சாத்தி ரோட்,
கொழும்பு-7


4181


## புத்தாண்டு . . .

"நன்னி வாழியோ நன்னி ... நன்னென் ... மாலை மருதம் பண்ணிக் ... மாலைக் ... கைவழி மருங்கிற் செவ்வழிபண்ணிப் புரவுக்கடன் பூண்ட வண்மையோனே"

கோடைத்திறன் கண்டீர நாட்டு மன்னனும் நன்னி நீவாழ்க! இப்பாணர் சபையோர் மனதைப்பறி கொடுக்கும்படி பாடினர். ஆனால் தன் இசைவன்மை யால் மாலைக்காலத்தை காலைக்காலமாக மாற்றிவிட்டார். ஆனால் இக்காலவழக்கின் படி செவ்வழிப்பண் ஞாயிறு வினைகளும் மாலைக்காலத்தைப் பண்ணை மாலையில் வாசித் திருந்தால் இன்னும் ஒரு காலமும் புன காலகிறமும் அல்லவா ஏற்பட்டிருக்கும். குற்றம் எம் மேல் அல்ல நம் கள் மேல் தான். எமது அரண்மனையில் இருக்கும் வித்துவான்களுக்கு ஏதாவது குறை உண்டா? நாங்களே இசை மீட்டலென் மீளச் சிட்டாவென் சகல சபோசகர்களையும் அனுப

(10-ம் பக்கம் பார்க்க)





யாழ். கனகரத்தினம் (ஸ்ரான்லி) மத்திய மகா வித்தியாலயப் பழைய மாணவ மாணவியர் சங்க விழாவும்

## வருடாந்தப் பொதுக்கூட்டமும்

## 15-4-72

நிகழும் 1972-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 15-ம் தேதி சனிக்கிழமை பிற்பகல் 3-30 மணி தொடக்கம் கல்லூரி மைதானத்தில் அதிபர் திரு J. S. அரியரத்தினம் அவர்கள் தலைமையில் வருடாந்தப் பொதுக்கூட்டமும் விழாவும் நடைபெறும். அன்று விசேட நிகழ்ச்சிகளாகச் சரவந்தாட்டப் போட்டியும், விநோத உடைப்போட்டியும் 'சரித ஓடம்', 'மயானத்தில் மன்னன்' ஆகிய நாடகங்களும் இடம்பெறும். பழைய மாணவ மாணவியர் குடும்பத்தினர் அனைவரும் வருக.

செ. சிவலோகநாதன்,
இணைச்செயலாளர்.

4132

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது புதுவருட வாழ்த்துக்கள்

# ஞானம்ஸ் ஸ்ருடியோ

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (போன்: 7067) ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.



எல்லோருக்கும் எமது உளங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்!

# நாதன் மியூசிக்கல் ஸ்ரோர்ஸ்

(பிரபல இசைக்கருவி விற்பனையாளர்களும், பழுது பார்ப்பவர்களும்)

[illegible]3. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

